உ
சிவமயம்



அமரர் மாணிக்கவாசகர் அழகரெட்ணம்

அவர்களின்

# அழகு

## நினைவு மலர்

25.11.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும்

வீரமாகாளி அம்மன் கோவிலைப் வாழ்விடமாகவும்

நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் மாணிக்கவாசகர் அழகரெட்ணம்**

அவர்களின்

# நினைவு மலர்


## 25.11.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# மாணிக்கவாசகர் அழகரெட்ணம்

தோற்றம்
10.07.1948

நிறைவு
31.10.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்**

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

அன்பினா லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க் கசிந்துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவ பெருமானே
சீருடைச் சிவபுரத்தரசே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர வென்கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசர்க்
காட் செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## திருமந்திரம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## திதி வெண்பா

ஆண்டு சர்வசித்தி ஐப்பசி சேர் முப்பத்தியொன்றில்
பூண்ட திதியோ தசி திதியில் - தக்க புகழ்
பெற்ற அழகரெட்ணமாக இருந்த உடல் தணிந்து
சிற்பரனைச் சேர்ந்தார் செப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் மாணிக்கவாசகர் அழகரெட்ணம் அவர்களின் மண்ணுலக வாழ்க்கையில்

# ஒரு துளி



*1948 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் திகதி அவனியில் அவதரித்த மாணிக்க வாசகர் - அழக ரெட்ணம் காலம் சென்ற ஆங்கில ஆசிரியரான மாணிக்க வாசகரினதும் காலஞ்சென்ற கண்மணி அவர்களி னதும் மூன்றாவது புத்திரனாக அரி யாலை (தபால்பெட்டிச் சந்தி, பாலர் வளவில்) பிறந்தார்.*

*அவருடன் மீனலோசனா, தன பாலசிங்கம், விஜயராணி ஆகியோர் சகோதரராகப் பிறந்தனர். அவர் களில் மூத்த சகோதரியான மீன லோசனா கால மாகிவிட்டார். அமரர் அழகரெட்ணம் தனது தாயை ஐந்து வயதிலேயே இழந்தமையால் தனது சிறிய தாயாரான பாக்கியம் என்பவரால் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்பட்டார்.*

*அமரர் மாணிக்கவாசகர் பாக்கியத்தை மறுமணம் புரிந்ததால் உதித்த மாலினி, மகாலிங்கம் ஆகியோருடன் சேர்த்து வளர்க்கப் பட்டார். பின்னர் இளவயதிலேயே வீரமாகாளி அம்மன் கோயில் சுற் றாடலிலே தனது பெரிய தாயாருடன் வாழ்ந்து வரலாயினர். தனது இள வயதுக் கல்வியை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் பயின் றார். பின்னர் வர்த்தகத்துறையில் ஈடுபாடு கொண்டு அதில் ஈடுபட்டார்.*

*தனது பெரியதாயாரான காலம் சென்ற பூமணி கனகரெட்ணம் அவர்களின் மகன் காலம் சென்ற ஜெயநாதன் என் போரது விருப்பப்படி புகழ்பூத்த வர்த்தகரான கார்த்திகேசு - விஜயரெட்ணம் சரஸ்வதி தம்பதி யினரின் மூத்தமகள் காலம் சென்ற இராசகுலசிங்கம் - அசலாம்பிகை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் இரண்டாவது புத்திரி ஜெயராணியை அமரர் அழக ரெட்ணம் திருமணம் புரிந்து இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு நீராவி யடியில் வசித்து வரும் நாளில் அவர்களில் மூத்த மகனான அரவிந்தன் மற்றும் பகீரதா, லக்ஷா ஆகியோரை நன் மக்களாக பெற்று மகிழ்ந்தார்.

மூத்த புத்திரன் அரவிந்தன் மாநகரசபை சாரதியாகவும் பின்னர் உலகவங்கி சாரதியாகவும் பணிபுரிந்து இன்று கொனிக்கா கலர் லாப்பில் பணிபுரிந்து வருகிறார். அவரு டைய இரண்டாவது மகள் பகீரதா யாழ் இந்து மகளிர் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்று புதிய உயர் கல்லூரியில் பேராதனை இறுதி ஆண்டு பட்டதாரி மாணவி யாகப் பயின்று வருகின்றார். மூன்றாவது புத்திரி லக்ஷா யாழ் இந்து மகளிர் கல்லூரியில் உயர்கல்வி கற்று உயர் கல்விக்குத் தயாராகிறார். இந்நிலையில் அமரர் அழகரெட்ணம் தன்னுடைய நிறைவாழ்வைப் பூர்த்திசெய்து அமரர் ஆனார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்பின் வழியது** உயிர்நிலை அஃதிலார்க்கு
**என்புதோல் போர்த்த** உடம்பு.

**அன்பகத் தில்லா** உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
**வற்றல் மரந்தளிர்த்** தற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மனைவியின் புலம்பல்

அன்று கண்ட நாள்முதலாய் என்றுமே மாறாத
பாசமுடன் என் உயிரான துணையாக
வாழ்ந்திருந்து எனை இங்கே
தவிக்கவிட்டு மின்னலாக மறைந்துவிட்ட
என் துணைவனே!
நான் எப்போ இனி உங்களை கண்டிடுவேன்
உங்களோடு சேர்ந்திருந்த உன்னத வாழ்வுதனை நான் மறவேன்
என்னோடு வாழ்ந்த நல்வாழ்வு போதும்மென்றோ நீங்கள்
சென்று மறைந்தீர்கள்



**கண்ணிமைபோல் எனைக்காத்து நித்தமும்**
**கண்கலங்க எனைவிட்டு நீங்கள் மட்டும்**
**சென்றதேனோ!**
**நீங்கள் இன்றி நான் உணவு உண்டதில்லை**
**நீங்கள் இன்றி நான் தூங்கி அறியவில்லை..**
**எதை நினைக்க... எதை மறக்க என்னாலே**
**முடியவில்லை...**

**உங்கள் பிரிவைத் தாங்க**
**முடியாது தவிக்கும்**
***அன்பு மனைவி***

## அருமை மகனின் துயரம்

என் அருமை அப்பா!
உலக வெளிச்சம் தெரியாது, உங்கள் பாசச் சிறகுதனில் எனை மறைத்து
எனக்காக எல்லாமே தந்து, எனைக் கண்போல காத்து
வளர்த்து வந்த என் அருமை அப்பா!
எனை தனியாக புலம்பவிட்டு நீங்கள் நெடுந்தூரம் சென்றதேனோ?
உங்கள் பிரிவு எனக்கும், நம் குடும்பத்திற்கும் ஈடுசெய்ய
முடியாத நிரந்தர வெற்றிடமாகவே இருக்கிறது. அப்பா!
எத்தனை செல்வங்கள், பேறுகள் இனிக் கிடைத்தாலும்
என் அப்பாவிற்கு ஈடாகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட்காக எத்தனை சுமைகளைத் தாங்கி
சுமை தாங்கியாக நீங்கள் வாழ்ந்தீர்களே அப்பா!
எவ்வகைத் துன்பங்கள் வந்தபோதும் யாவற்றையும் தனி
ஒருவனாக நீங்களே தாங்கி உங்கள் மனதினிலே
புதைத்து... எமைக் காத்து நின்றீர்களே அப்பா!
உங்களைப் போன்ற ஒரு அப்பாவை நான் இனி
எங்கு காண்பேன் என் அருமை அப்பாவே...!
உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில் இருந்து
எங்கட்கு ஆசீர்வதிக்க வேண்டி நிற்கும்.

**உங்கள் அருமை மகன்**
**அரவிந்தன்**

## செல்ல மகளின் துயரம்

என் பாசமான அப்பா!
ஏன் இந்த அவசரமோ?
இன்னும் கொஞ்சக் காலம் காத்திருக்க கஷ்டமோ?
என் மடியில் கண்மூடி எங்கே சென்றீர்களோ?
நினைக்க நினைக்க நெஞ்சம் வலிக்கிறதே!
என் கண்ணில் கண்ணீர் இனி இல்லை - அப்பா
நான் அழுது முடியாது தவிக்கின்றேன் - இங்கே
அதை அறிந்தால் தாங்குவீர்களோ நீங்கள் - அங்கே
உங்கள் சந்தோஷம் எதுவென்று நானறிவேன்
அதை நான் முடித்துவிடுவேன் - அப்பா
அது பற்றி அறிந்து நீங்கள்
ஆறுதல் அடைந்திடுங்கள் - அப்பா
வேறு எங்கும் செல்லாது
மீண்டும் என்னிடமே
வந்துவிடுங்கள் ..........அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்


**செல்லமகள்**
**அ. பகீரதா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மகளின் துயரம்



என் ஆசை அப்பா!
அன்பு என்ற சொல்லுக்கு அர்த்தம் நீங்கள்...
அப்பா
என் சிறுவயது முதல் அன்போடு
அரவணைத்து வளர்த்தீர்களே... அப்பா
நான் வளர்ந்த பிறகு அன்பாய்
உணவூட்டி உடுப்புகள் தனை தோய்த்து தந்து
நின்ற தங்களை எங்கு இனிநான் காண்பேன்...
அப்பா
என்னை பரீட்சைக்கு படிக்கவிட்டு கண்விழித்து
காத்திருப்பீர்களே... அப்பா
இப்ப நீங்கள் எங்கு சென்றீர்களோ ... அப்பா
நீங்கள் வருவீர்கள் என்று எண்ணி நான் இப்போ
வாசலிலே காத்து நிற்கிறேன்.... அப்பா
ஏன் இந்த ஏமாற்றம் தனைத் தந்தீர்கள் ... அப்பா
நான் சாப்பிடவில்லையென்றால் நீங்களும் சாப்பிடமாட்டீர்களே அப்பா.
இனி நாம் என்ன செய்வோம் .... அப்பா
எனக்கு இனி, என் அப்பா எங்கே!
நீங்கள் நெஞ்சுவலி தாங்காது துடித்தபோது
ஊரடங்கு சட்ட வேளையிலே அண்ணாவும் நானுமாய்
அப்பப்பா வீடு நோக்கி ஓடினோமே - அப்பா
அதைவிட மின்னல்வேகத்தில் எனைவிட்டு சென்றுவிட்டீர்களே... அப்பா
ஏன் இந்த வேகம்... அப்பா
நான் இனி என் அப்பா போல் ஒரு நல்ல அன்பான
உள்ளத்தை எங்கு சந்திப்பேன் ... அப்பா
கடவுள் ஒரு வரம் தந்தால் என் அப்பாவை நான் திருப்பி கேட்டிடுவேன்
கண்களில் நீர் வழிய காத்து நிற்கும்...

**கடைசி தங்க மகள்**
*அ. லக்ஷா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல்

காற்றோடு வந்த சேதி கனவாகிப் போகாதோ!
நேற்றோடு நீ சென்று நெடுநாள் ஆகிறதோ
ஊற்றாகப் பெருக்கெடுத்து ஓடுகின்ற கண்ணீரை
வற்றாது வழிந்தோடும் வாஞ்சைமிகு கண்ணீரைத்
தடைபோட வழியின்றித் தவிக்கின்றேன் நானிங்கே!
தன்னலங் கருதாத தங்க மனம் கொண்டவனே
மின்னலென நீ மறைந்த மாயமென்ன சொல்லண்ணா!
மண்ணுலக வாழ்வு போது மென நீ நினைந்தா
விண்ணுலக மெய்தி நீ சென்றாயோ என் அண்ணா!
யாரென்று பாராது நீ சென்று உதவிடுவாய்
ஊரெல்லாம் உனைப்பற்றிக் கதைக்குதண்ணா!
நோயில்லை, நொடியில்லை, பாயினிலே படுக்கவில்லை
பாயினிலே படுத்தாலும் பராமரிக்க நாமிங்கு
பலரிருக்க ஏனண்ணா சென்று விட்டாய்
உயிராக உனைநினைத்து உனக்காக
வாழ்ந்திருக்கும் உன்னினிய மனையாளை
அப்பா! அப்பா! என அன்பொழுக
அழைத்து நின்ற அன்பு நிறை குஞ்சுகளைத்
தவிக்க விட்டுத் தனியாகச் சென்றதேனோ!
(B) பியூட்டிப் பெரியப்பா, அப்பப்பா என்றழைத்த
பிஞ்சுகள் யாவுமிங்கே நெஞ்சுருகி நிற்கிறதே!
அத்தான், அத்தான் எனப் பாசமுடன்
அழைத்து மகிழ்ந்து நின்ற
மைத்துனி மாரெல்லாம் மனம் வெதும்பி மாய்கின்றனரே!
உடன்பிறப்பு யாவுமிங்கே
ஓய்வின்றி ஓலமிடுகிறதே!
தனைப்பார்க்க நீயிருப்பாய் எனநினைந்து
தைரியமாய் நம்பி நின்ற நம் தலைவன்
இடைநடுவில் நீ சென்ற காரணத்தால்
தடுமாறித் தவித்தபடி நிற்பதை நீ உணராயோ!
நமட்டுச் சிரிப்புக் கொண்ட
நல்ல நல்ல பகிடிகளை
நாங்களினி எங்கு இனிக்காண்போமையா!
எவரிடமும் அன்பு கொண்ட உன்னுருவம்
சுவர்களிலே சித்திரமாய் காட்சியளிக்கிறதே!
என்றுமே நித்தியமாய் சொர்க்கத்திலே
வீற்றிருந்து ஆசி வழங்கிட வேண்டிநின்று
வினயமுடன் வணங்குகின்றேன்.

அன்பு மறவாச் சகோதரன்
அருள் – செல்லமாணிக்கம் (மட்டக்களப்பு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பெருமையான பெரியப்பா

*ஆயிரம் சுமைகள் சுமந்தாலும்*
*அன்போடு எமையும் அணைத்தீர்களே! பெரியப்பா*
*இன்னல்கள் பற்பல இருந்தாலும்*
*இன்முகத்துடன் என்றும் வரவேற்பீர்களே! பெரியப்பா*
*வயிறு நிறைய நாம் சாப்பிட்டிருந்தாலும்*
*நீங்கள் சாப்பிடும் போதும் ஒருவாய் தருவீர்களே! பெரியப்பா*
*அறுபது வயது என்றாலும் எங்களுடன் சேர்ந்து*
*விளையாடுவீர்களே! பெரியப்பா*
*சகோதரி போன்ற மச்சாளையும் காணாமல்*
*பிள்ளைகள் போன்ற எங்களையும் பாராமல்*
*பேரக் குழந்தை ஹரிஸ்ஷனை காண ஆசை கொண்டபடி*
*சகலன் அருகிருந்தால் போதுமென போனீர்களோ! பெரியப்பா*
*வயிராற அன்னமிட்ட உங்களுக்கு வாய்க்கரிசி போட*
*பாக்கியம் கிடைக்காத பிள்ளைகள் நாம்*
*ஏங்கித் தேம்புகின்றோம் நீங்கள் எங்கே...?*
*எங்கள் அருமையான பெரியப்பா!*
*பெருமையான பெரியப்பா!*

**உங்கள் பிரிவால் துயரும் பெறாமக்கள்**
*நித்யா, சுகன்யா,*
*பேரன் – ஹரிஷ்ஷன (மட்டக்களப்பு)*

## அத்தான்!

*ஐந்து வயதில் அறிமுகமாகி அரவணைத்த அத்தான்*
*அன்று முதல் நான் தானே உங்கள் மூத்த பிள்ளை*
*சைக்கிளில் ஏற்றி சுற்றி வந்தீரே....*
*அந்த சந்தோஷம் இனி வருமா?*
*பாசமாக என்னை "பிரி" என்றழைத்தீரே*
*இன்றும் எம்மைப் பிரிந்த செய்தியை நம்பமுடியவில்லையே! அத்தான்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.*

**உங்கள்**
*'பிரி' (பிரியா – பாலேந்திரன்)*
*(கொழும்பு)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பியூட்டி பெரியப்பா!

பத்து மாதத்தில் வந்து உங்களை பார்த்தேனே!
படம் பார்த்தால் இது "பியூட்டி பெரியப்பா" என்று காட்டுவேனே
கடைசி நிமிடத்தில் கூட அப்புச் சாமியிடம்
"பியூட்டி" பெரியப்பாவின் ஊவாவை மாத்திவிடு என்று கேட்டேனே...
இனி என் குட்டிப் பாப்பாக்கும் உங்களை
படத்திலா காட்டுவது?
நீங்கள் அனுப்பிய "கிரேப்ஸ்" சுவை என்றென்றும்
மறக்காது பியூட்டி பெரியப்பா

உங்கள்
நிலானிக் குட்டி (கொழும்பு)

## அழகு அத்தான்

மணிவிழாவை மகிழ்வுடன் கொண்டாடிய
மகிழ்ச்சி இன்னும் மறக்கவில்லையே...
அதற்குள் காலனிடம் கலந்து விட்டீர்களே! அத்தான்

பிறந்த நாள் கேக்குடன் நான்வந்த வேளை
பூரித்த உங்கள் முகம் மறக்காது... அத்தான்
கடைசி முகம் காண மாட்டேன் என்று
அன்று காணா முகம் காட்டினீரோ!

சாப்பாட்டு வேளை வீட்டிற்கு வந்தால்
"சாப்பிட்டு வந்திட்டேன்" என்று சொன்னாலும்
திணித்து திணித்து ஊட்டி விடும்
உங்கள் அன்பு இனி யாரிடம் கிடைத்திடும்!

"அழகு" உங்கள் உள்ளத்தின் அழகல்லோ பேரழகு
"அத்தான்" இருவரும் ஓடிப் பிடித்து விளையாடும்
இன்ப வேளை இனி வருமா...
ஆண்டாண்டு கடந்தாலும் ஆறுமோ எம் துயரம்

அமரர் ஆகிவிட்டாலும் மறக்குமோ உம் உருவம்
ஆயிரம் பேர் வந்தாலும் யாரினி நிரப்பிடுவார் உம் இடத்தை
அன்பின் உறைவிடமே உம் ஆத்மா
சாந்தி அடையட்டும்

கண்ணீருடன்...
உங்கள் கர்ஷி (கர்ஷா) (கொழும்பு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புச் சித்தப்பா!

*அழகுச் சித்தப்பா அழகுச் சித்தப்பா என்று அன்பாக அழைப்பேனே!*
*என்னடா எங்கே போகிறாய்? கண்டபடி திரியாதே*
*வீட்டைபோ என்பீர்களே! சித்தப்பா*
*கெதியில் ஒரு கல்யாணத்தை செய்யமாட்டாயா? என்றீர்களே சித்தப்பா!*
*செய்தும் வைத்தீர்களே என் அன்புச் சித்தப்பா!*
*உங்களை நாம் பார்த்து எவ்வளவு நாட்கள்*
*நான் என் செல்வனுடன் உங்களைக் காண முடியவில்லையே சித்தப்பா!*
*எங்கு சென்றீர்கள் என் சித்தப்பா!*

**பெறாமகன்**
*சுரேஸ் – சியாமளா (நோர்வே)*

## சித்தப்பா!

*எழில் முகம் கொண்ட எம் சித்தப்பா! ஆசை ஆசையாய் அழைப்போமே*
*அழகுச் சித்தப்பா என்று*
*அழைத்த குரலுக்கு அன்போடு அழைத்து சாப்பாடு தருவீரே!*
*எம் முகத்தில் வாட்டம் கண்டு என்னடி என்று கதைத்து சிரிக்க வைத்து*
*விடுவீர்களே அழகுச் சித்தப்பா!*
*காலத்தால் அழியாது சித்தப்பா உம் நினைவு*
*யாலத்தில் எமக்குள்ளே தெய்வமாய் ஆண்டவனடி*
*சென்றாயோ! இல்லை... மீண்டும் எம்மிடம்*
*வருவீரோ அழகுச் சித்தப்பா!*
*எம் பிள்ளைகளையும் பேரப்பிள்ளை என்று அன்போடு*
*அணைத்தீரே சித்தப்பா!*
*இனி எங்கு காண்போம் அழகுச் சித்தப்பா!*

**பெறாமகள்** *பிரபாகரன் – சைலஜா (இத்தாலி)*
**பேரப்பிள்ளைகள்**

## சகோதரா!

*நீ நடந்த நிஜங்கள் எல்லாம் இன்று நிழலாகிப் போனதென்ன!*
*நின் கடன், கடமை, நேர்மை என நில்லாது உழைத்து*
*நிழலாக நின்றாய் சோதரா!*
*அன்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளி விளக்காய்*
*இப் பாரினிலே வந்து உதித்த பாசமிகு சோதரா!*
*பெறாமக்கள் உமை கூட்டிச் சென்றாரோ?*
*உன் பொன் குஞ்சுகள், மனைவியைப் பரிதவிக்க*
*விட்டு எங்கு சென்றாய் சோதரா!*

**உடன்பிறவாச் சகோதரன்**
*உமாபதி (வவுனியா)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் வல்லவராய் ஒளி வீசி
வாழ் வெல்லாம் நமக்கு வழிகாட்டி
கள்ளமில்லா உள்ளம் கொண்ட மைத்துனா!
கண் கலங்க எமை விட்டு நாம் கடைசி
வதனம் பாராமல் உம் பெறா மக்களுடன்
போனதேனோ?

மைத்துனி
பத்மராணி (பவா) வவுனியா

## அன்பும் பண்பும் அமையப் பெற்ற அழகு

நீர் திடீரென்று எம்மை விட்டுப்பிரிந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் பெரும் துயரமும் அடைந்தோம். உமது பிரிவு எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாத பேரிழப்பு. உமது புன் சிரிப்புடனான வதனம்தான் எம் கண்களில் தோன்றிக் கொண்டிருக்கிறது.

அனைவருக்கும் உதவுவதே உம்மில் பலர் காணும் சிறப்பு. அவ்விடத்தை யாரும் நிரப்பமுடியாது நீர் இவ்வுலகைவிட்டு மறைந் தாலும் உமது செயல்கள் ஒவ்வொன்றும் எமது மனங்களில் என்றும் நிலைத்திருக்கும்.

ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்
மகாலிங்கம் – லலிதா (கொழும்பு)

## எப்போ காண்போம்

சைக்கிளில் ஏற்றி வட்டமடித்த பியூட்டி பெரியப்பா
உப்பு மூட்டைத் தூக்கி, யானை போல
எம்மைச் சுமந்து விளையாடுவீர்கள்
மாங்காய் பிடுங்கி உப்புத் தூள்
போட்டு சாப்பிடத் தருவீர்
எங்கே போனீர்? இனி எப்போ
பார்ப்போம்? இனி எப்போ
பார்ப்போம்? இனி ரெலிபோனில்
கதைக்க மாட்டீர்களா?

பிரணவி - பிரதீப்குமார்
இராமநாதன் மகளிர் கல்லூரி கொழும்பு

## பெரியப்பா இல்லையா?

லைக்கா, பைக்கா அண்ணண்ணாவிற்கு
இனி அப்பா இல்லை
எனக்கு இனி பியூட்டி பெரியப்பா இல்லை
சாமிகட்டி, பட்டம் செய்து
விளையாட பியூட்டி பெரியப்பா இல்லை

விதுர்சன் .பி
சென் தோமஸ் கல்லூரி கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக் குமுறல்கள்

மச்சாளின் கணவன் நீங்கள். நாம் அழைப்பதோ
அத்தான் என்றுதான். உங்கள் இழப்பு எம்
அனைவரதும் இதயத்தை ரணமாக்கி விட்டது.
எம் உறவுகளின் எல்லா நிகழ்வுகளையும்
உங்கள் வீட்டு வைபவம்போல் முன்னின்று
நடத்தியதை மறக்க முடியுமா? அன்பை,
பாசத்தை உங்கள் பேச்சிலே வெளிப்படுத்தியதை
இன்று நினைத்து மனம் கலங்குகின்றோம்.
இன்று எம் மத்தியில் நீங்கள் இல்லையென்
பதை நம்ப முடியவில்லை. உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பிரபாகரன் – வாணி, பிரதீபன் – பவானி, அனித்தா – ரமணன்
கொழும்பு

## என் இனிய பியூட்டி பெரியப்பா

காற்றில் ஆடிப் பறக்கும்
பட்டம் பல கட்டி
வீட்டில் தெரியாது - ரயில்
றோட்டில் வானில் ஏற்றி
விளையாடியதை மறப்பேனா?
மாமரத்தின் கிளையில் நாம்
மகிழ ஊஞ்சல் கட்டி
உயர உயர ஆட்டி
கோழிக் கூட்டினிலே குஞ்சைப்
பிடித்துக் கொஞ்சத் தந்து
கொஞ்சிக் குலாவி மகிழ்ந்த எம் பியூட்டி பெரியப்பா
மாரடைப்பு என்னும் காலனவன்
விண்ணுலகம் உம்மை அனுப்பியதால்
எம்மிடம் கூறாது சென்றீரோ
எண்ணி எண்ணி நான் வடிக்கும்
கண்ணீர்த் துளிகளே காகிதத்தில் கவிதையானதே.

பதுர்சன் பி
சென் தோமஸ் கல்லூரி (கொழும்பு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறப்புக்களின் உள்ளத்திலிருந்து...

உறுதியும் உணர்வும் நிறைந்த விரிவு
கொண்ட எமது உறவுக்குள் அவ்வப்போது
பிரிவு என்னும் விதி, பொல்லாப்
பெருந்துயர் தந்து கொண்டிருப்பதைப்
பொறுக்கவே முடியவில்லை!

எமது குடும்பத்தின் அழகு நிலாவாம் சுலோசனா அக்காவின் மறைவினால் அதிர்ச்சியில் மூழ்கிருயிந்தோம். அதிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு கொண்டிருக்கும் போது, தனபாலசிங்கம் அண்ணரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகள் அகால மரணமெய்தி ஆண்டவனடி சென்றதால் அனைவருமே பேரதிர்ச்சியில் மீள முடியாமல் இருந்தோம்.

இப்போது, ஒளி வீசிக்கொண்டிருந்த எங்கள் அகல் விளக்குத் திடீரென அணைந்தது. இந்த பேரதிர்ச்சியிலிருந்து மீளமுடியாது துடித்துக் கொண்டிருக்கிறோம். எக்காலம் இனியுன்னைக் காண்போமோ? ஏதோ ஒன்றைத் தொலைத் தது போன்றே உணர்கின்றோம்.

சிட்டுச் சிரிப்புடனே சிறப்பாக வாழ்ந்த நீ, விட்டுப் பிரிந்தெமை வியனுலகம் சென்றாயே'

மீண்டும் மறுபிறவி எடுத்து நம்மிடை வந்திட வேண்டும் என்றும், உன் ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் இறைவனை இருகரம் கூப்பி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உன் நினைவுகளுடன்**
**சகோதர சகோதரிகள்**
**மா. தனபாலசிங்கம், மா. விஜயராணி**
**மா. செல்வராணி, மா. மகாலிங்கசிவம்**

## இழப்பு

சுற்றம் ஆயிரம் சூழ்ந்து இருந்தென்ன
உற்றம் கோடி ஒருங்கே இருந்தென்ன
நண்பர்கள் பல நூறு கூடி இருந்தென்ன
உன்னிடத்தை நிரப்ப இன்று எவருமில்லை.
இழப்பு என்பதன் யதார்த்தத்தை உன்
மரணம் புரியவைத்திருக்கிறது!

**குணராசா – கமலா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்பு என்றால் உங்கள் முகம்தான்
எங்கள் உள்ளத்தில் தோன்றுதையா
அல்லும் பகலும் அயராது உழைத்திருந்து
தொல்லைகள் தீர்க்கத் துடியாய் துடித்தெழுந்தீரே
அல்லல்கள் வரும் போது எமை அரவணைக்க யாருமின்றி
நீர் வேரோடு சாய்ந்ததனால் வாடுகின்றோம் நாமிங்கு
இறைவன் திருவடியை நீர் பற்றி விட்டாலும்
ஆழ்மனதில் அன்பு முகம் மறைந்திடவில்லை.

மண்ணில்
10 ◈ 07 ◈ 1948



விண்ணில்
31 ◈ 10 ◈ 2008

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆறுதல் கூறி அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

லக்கிஸ்ரார் வீடியோ சென்ரர்.
மானிப்பாய் றோட், ஆறுகால்மடம்.

வீரகாளி அம்மன் கோவிலைப் பிறப்பிடமாகவும்,
நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் மாணிக்கவாசகர் அழகரெட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**
**10 . 07 . 1948**

**மறைவு**
**31 . 10 . 2008**

எமது நிறுவனத்தின் ஊழியரான
அரவிந்தன் அவர்களின் தந்தையாரான
**மாணிக்கவாசகர் அழகரட்ணம்**
அவர்கள் மரணமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் மறைவினால் துயரடைந்துள்ள அவரது
குடும்பத்திற்கு கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர் , ஊழியர்கள்
கொனிக்கா கலர் லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## மாணிக்கவாசகர் அழகரெட்ணம்

(Sierra களஞ்சிய உதவியாளர்)

31-10-2008 அன்று இறைபதமடைந்த எமது நிறுவனத்தின்
களஞ்சிய உதவியாளர்
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Sierra Construction Ltd

ANDRA [illegible] T.P :021-459[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சரவணபவ



# தேவராய சுவாமிகள் இயற்றிய
# கந்த சஷ்டி கவசம்

### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன்அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா! நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ் குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்துஎன்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி மிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.
சரணம் சரணம் சண்முகா சரணம்.


முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் குடும்பத் தலைவன்

**அமரர் மாணிக்கவாசகர் அழகரெட்ணம் அவர்களின்**

மறைவுச்செய்தி கேட்டு நேரில்வந்து அநுதாபங்களைத்

தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, கடிதம் மூலம்

அநுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும்,

கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களும், மற்றும்

இறுதிக்கிரியைகள்,அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில்

கலந்து சிறப்பித்த அனைவருக்கும் இம்மலரை அச்சிட்டு உதவிய

பாரதி பதிப்பத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த

நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

25.11.2008

குடும்பத்தினர்.

பாரதி பதிப்பகம். 430. காங்கேசந்துறை வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Sivaranjanam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org